1992 மார்ச் 16]

(அ) கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் முதன் முதலாக எந்தத் தொகுதியில் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் சென்னையில் முன்னோடி திட்டமாக செயல்படுத்துவதற்கு சென்னைக் குடிநீர் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு.டி.எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆம் என்று கூறியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் எவ்வளவு விரைவில் செயல்படுத்தப்படும் என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. அதற்கான இடத்தைத் தேர்வு செய்த பிறகு விரைவில் இந்தத் திட்டம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டத்திற்கு அதற்குரிய தொழில் நுட்பம் நம்முடைய மாநிலத்திலே கிடைக்கிறதா அல்லது வெளி நாட்டினுடைய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த கடல் நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டத்திற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நுட்பம் நம்முடைய மாநிலத்திலேயே கிடைக்கிறது. நம்முடைய மாநிலத்திலேயே ஆய்வு செய்து இந்தத் திட்டத்தை தயாரித்து இருக்கிறோம். அதை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 231. திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

231—

அமராம்பாளையம் கூட்டுக்குடிநீர்த் திட்டம்.

*3961 திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

கிணத்துக்கடவு, பெரியநெகமம் ஆகிய ஊர்களுக்கும் மற்ற கிராமங்களுக்கும் குடிநீர் தரும் அமராம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எந்த ஆண்டு முடிவடையும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிணத்துக்கடவு, பெரிய நெகமம் ஆகிய ஊர்களுக்கும் மற்ற கிராமங்களுக்கும் குடிநீர் தரும் அமராம்பாளையம் கூட்டுக்குடிநீர்த் திட்டம் 1993 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. நா. சா. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு நம்பிக்கையை தந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த அமராம்பாளையம் குடிநீர்த் திட்டம் கிணத்துக்கடவு, பெரிய நெகமம் என்ற பேரூராட்சிகளுக்கு மட்டும் அல்லாமல், அதிலே பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், கிணத்துக்கடவு ஒன்றியம் ஆகிய இரண்டிற்கும் உட்பட்ட 70-க்கும் மேற்பட்ட கிராமங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது என்பதை நான் பொறியாளர் மூலமாக அறிந்தேன். ஆக அத்தனை கிராமங்களையும் உள்ளடக்கி அந்தக் குடிநீரை விநியோகிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எல்லாக் கிராமங்களையும் உள்ளடக்கியதாகத்தான் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமராம்பாளையம் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை 1993 ஆம் ஆண்டு இறுதிக்குள் நடத்தி முடிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய அந்தப் பகுதி நிலத்தடி நீர்வளம் இல்லாத பாறையான பகுதி. அதிலே போர் வெல்கள் போட்டாலும் கூட தண்ணீரே வருவதில்லை. எனவே இந்த அமராம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இன்னும் சீக்கிரமாக செய்ய வேண்டும். வறட்சி இருக்கிற இந்த நேரத்திலே, அதிலே தண்ணீர் சுத்தப்படுத்துவதற்கு சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதில்தான் காலதாமதம் ஆகிறது என்று பொறியாளர்கள் சொன்னார்கள். எனவே அதற்கு இடையில் சாதாரணமான தண்ணீர் வழங்கிட அந்தக் குடிநீர்த் திட்டம் விரைவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1992 மார்ச் 16]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை வருகிற 1993 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-25.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 232. திரு. ப. கலியபெருமாள். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

232—

தொழிற்பயிற்சிகள் அளித்து தொழில்கள் துவங்க கடனுதவித் திட்டம்,

*5261 திரு. ப. கலியபெருமாள் :
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

படித்தவர்களுக்கும் கிராமப் பகுதியில் வாழ்பவர்களுக்கும் பல்வேறு தொழிற்பயிற்சிகள் அளித்து தொழில்கள் துவங்க கடனுதவி அளித்திட அரசிடம் திட்டங்கள் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

வேலைவாய்ப்புப் பிரிவைப் பொறுத்தவரை தொழில் நுட்பப் பயிற்சி சான்றிதழ் பெற்ற நபர்கள் சுய தொழில் துவங்க ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மதுரை, தென்னாற்காடு மற்றும் வடாற்காடு—அம்பேத்கார்) 1987–88 முதல் அமுல் படுத்தப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு சுய தொழில் துவங்குவதற்காக இத்துறையால் அதிகபட்சம் ரூபாய் 2,000 அல்லது வங்கி—